04.11.2025 வா.சா.1 மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 119 /2019 ) திரு.கருப்பசாமி.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) காம்பவுண்டுக்குள் 4 வீடுகள் உள்ளது என்றால சரிதான். காம்பவுண்டுக்குள் வீடு 2 வீடுகள் தெற்கே பார்த்தும், 2 வீடு வடக்கே பார்த்தும் உள்ளது என்றால சரிதான். பேச்சிமுத்து என்பவர் எனது வீட்டிற்கு தெற்கு பக்கம் உள்ளார் என்றால் சரிதான். பேச்சிமுத்து எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு தாத்தா முறை வேண்டும். பேச்சிமுத்துக்கும், பேச்சியம்மாளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரிதான். ஊர்காவலனுக்கும், பேச்சிமுத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். பேச்சியம்மாளுக்கும் - சுடலைமாடனுக்கும் 2 பிள்ளைகள் என்றால் சரிதான். அதில் யார் யார் என்றால் எனது பெரியப்பா எனது அப்பா. பெரியப்பா இராமசாமி திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். பிராதில் 1 வது தபசில் சொத்தை பற்றி எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 2 வது தபசிலை பொறுத்து எனக்கு என்றும் பிரதிவாதிகளும் வேறு நபரிடம் கிரையம் பெற்றுள்ளதாக சொல்லுகிறார்கள் அது தான் வழக்கு என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2 வது பக்கத்தில் முத்திரைத்தாள் முத்திரையில் மார்ச் 9 என்று முத்திரையிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பக்கம் 1 ல் நவம்பர் என்று முத்திரையிடப்பட்டள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ம்தேதி என்று காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2,3,4 தாள்களில் ஆவணத்தின் பதிவு எண் காணப்படவில்லை என்றால் ஆவணத்தை பார்த்து விட்டு என்னவென்று தெரியவில்லை என்று சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.2 ல் நான் ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான் எனது தந்தை தான் தரப்பினர். வா.சா.ஆ.2 ல் சாட்சிக்கையொப்பம் போட்ட நபர்கள் கன்னியப்பன்,கிருஷ்ணசாமி இறந்துவிட்டார்கள்.

2) ஆவணத்தை எழுதியவரும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 நவம்பர் மாதம் முத்திரைத்தாள் வாங்கப்பட்டு அக்டோபர் மாதத்தில் வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது நான் நான் சிறுவனாக இருந்தது போது எழுதப்பட்டுள்ளது. நான் குடியிருந்து வரும் வீடு எனது தந்தை காலத்தில் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.1984 க்கு முன்பா அல்லது பின்பா கட்டப்பட்டது என்றால் 1990 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. வா.சா.ஆ.2 ல் 2 வது பக்கத்திற்கும் கடைசி பக்கத்தில் உள்ள பேச்சியம்மாளின் கைரேகை வித்தியாசம் உள்ளதா என்றால்

வித்தியாசம் உள்ளது கைரேகை வைக்கும் போது கைரேகை நிருபுணரை வைத்து ஆய்வு செய்தால் தான் வித்தியாசத்தை கண்டுபிடிக்க முடியும் என்று சாட்சி கூறுகிறார். இறந்து போன பேச்சியம்மாள் எனது பாட்டி தான் என்று சொல்லுவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இனிமேல் தான் எடுக்கவேண்டும். இறந்து போன பேச்சியம்மாள் எனது பாட்டி கிடையாது என்றால் ஊரில் வந்து விசாரித்து பார்த்தால் தெரியும். சொள்ளமாடன் மனைவி தான் பேச்சியம்மாள் என்பதை காட்டக்கூடிய ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு 2வது தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம மட்டும் கேட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 போர்ஜரியாக உற்பத்தி செய்து வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
04.11.2025.